# றுவர் பாடல்கள்

(பள்ளி மாணவர்களுக்கென இயற்றப்பெற்றது)

10.10.62



இயற்றியவர்:

**சி. குருசாமி** (ஆசிரியர்)

சீலையம்பட்டி.

லக்கியப்பண்ணை,

பட்டி P. O.

(மதுரை ஜில்லா)

துக்காசுகள்.

CH
0-,Ix
N62
182133

# 1. சப்த வகைகள்

1. நாய்கள் கூடிக் குரைக்குதிங்கே
ளொள், ளொள், ளொள்;
நரிகள் கூடிக் கத்து தங்கே
ஓ, ஓ, ஓ!

2. பூனைக் குட்டி கத்திடுதே
மியாவ், மியாவ், மியாவ்;
பூவண்டுகள் பறந்திடுதே
விர், விர், விர்!

3. கொட்டுச் சத்தம் கேட்டிடுதே
டம், டம், டம்;
குழல் சப்தம் கேட்டிடுவாய்
பீ, பீ, பீ!

4. கோழி, குஞ்சை அழைத்திடுதே
கொக், கொக், கொக்;
குள்ள வாத்தும் பாடிடுதே
க்வா, க்வா, க்வா!

5. ரம்பம் மரத்தை அறுத்திடுதே
சர், சர், சர்;
ராகப் பாட்டுக் கேட்டிடுதே
ஆ, ஹா, ஹா!

6. பல்லி மேலே கத்துது பார்
டிக், டிக், டிக்;
பந்து தரையில் அடிபடுதே
டப், டப், டப்!

# 2. நம் நாடு.

(மெட்டு:— 'சம்சாரம் படத்தில் "சம்சாரம்,
சம்சாரம்" என்ற பாடல்)

நம் நாடு நம் நாடு
நமது சொந்த நாடு திருநாமமதைப் பாடு (நம்)

இமயம் வடக்கு எல்லை—தெற்கு
இந்து சமுத்ரம் பாராய்
அலை விளையாடும்—வங்க (ம்)
அரபி, கிழக்கு மேற்காம்! (நம்)

விரைந்தோடும் நதிகள் காண்பீர்
விளை வோங்கும் வயல்கள் காண்பீர்
வளந் தேங்கும் தொடர்ச்சி மலைகள்
வகையாகப் பெற்ற நாடாம் (நம்)

எல்லாம் நிறைந்த நாட்டில்—துயர்
ஏற்றங் கொள்ளக் கண்டோம்
வாட்டும் துயரைப்போக்கி—இன்ப
வாழ்வு காண வாரீர்! (நம்)

# 3. 'அ' கர வரிசைப் பாடல்

அப்பா என்னை நேற்று
ஆவ லோடு அழைத்து
"இந்தா பாப்பா" என்று
ஈந்தார் பெட்டி ஒன்று!
உடைத்துப் பார்க்க எண்ணி
ஊஞ்சல் மேலே அமர்ந்தேன்
"என்ன" வென்று தோழி
ஏகாந்தியும் கேட்க,
ஐயத்துடன் பிரித்தோம்
ஒய்யா ரமாய்ச் செய்த
ஓசை செய்யும் வண்ண
ஔவைப் பாட்டி பொம்மை!

தமிழ்நாடு
சென்னை-600

# 4. சமாதான கீதம்

(மெட்டு:– 'மணமகள்' படத்தில்
"நல்லபெண்மணி" என்ற பாடல்)

யுத்தம்கூடாது வெறியுத்தம் கூடாது—பாழ்
யுத்தத்தாலே மக்கள்வாழ்வு
படுபயங்கரமாம்-அதனுல் (யு)

கடந்தயுத்தம் விளைத்த கொடுமை
காணச்சகிக்கலே—ஆம்
காணச்சகிக்கலே—அதன்

காரணமாய் மாந்தர் வாழ்வு
இன்னும் திருந்தலே

மடிந்த மக்களின் பெண்டுபிள்ளைகள்
கதறித் தெருவிலே—இன்னும்

அளவில்லாத மிடிமைப்பேயால்
அகதியானுரே—அதனுல் (யு)

யுத்தமூட்டி உலகை அழிக்கச்
சித்தங் கொண்டவரை—நாம்

நித்தம் சாந்தி கோஷமிட்டுத்
தடுக்கணுமவரை

இத்தரைமீதென்றும் யுத்தம்
இருந்திடாவரை—இன்

வாழ்வு எங்கும் செழித்து ஓங்கி
வளருமே—அதனுல் (யு)

# 5. 'ச' கர வரிசைப் பாடல்.

சப்பரமாம் சப்பரம்
சாமி செல்லும் சப்பரம்
சிங்கார மானது
சீராகச் செய்தது!

சுற்றியெங்கும் தோரணம்
சூழ்ந்திருக்கும் சப்பரம்
செங்கரும்பு வாழைபல
சேர்த்திணைந்த சப்பரம்!

சைகைகாட்டும் பொம்மைகளால்
சொலிக்கும் நல்ல சப்பரம்
சோதி அருள் தெய்வத்திற்குச்
சௌகரியச் சப்பரம்

# 6. தம்பிக்கு!

(மெட்டு:- "மணப்பாரை மாடுகட்டி..."
என்ற பாடல்)

1. காலையிலே எழுந்திருச்சு
கடமையெல்லாம் முடித்துவிட்டுக்
கல்விகற்க அனுதினமும் சின்னத்தம்பி-நீயும்
பள்ளிக்கூடம் சென்றிடுவாய்
செல்லத்தம்பி! (கா)

2. ஆசானின் போதனையை
ஆர்வத்தோடு கேட்டு என்றும்
அருமையான பையனென்றும்
சின்னத்தம்பி—பெரியோர்
அழைத்திடவே பெருமைகொள்வாய்
செல்லத்தம்பி! (கா)

3. உடன்பயிலும் மாணவர்பால்
உண்மையான உறவுகொண்டு
அன்புடனே நடந்திடுவாய் சின்னத்தம்பி
—இதில்
அளவில்லாத நன்மையுண்டு
செல்லத்தம்பி! (கா)

4. உடலுறுதி பெற்றிடவே
உடற்பயிற்சி செய்திடணும்
உலகில் நன்ருய் வாழ்வதனில்
சின்னத்தம்பி—இதைநீ
உணர்ந்து செயல் புரிந்திடுவாய்
செல்லத்தம்பி! (கா)

CH
0-1
N6
182133
ஆவணக் காப்பக
சென்னை-600 008

# 7. 'ப' கர வரிசைப் பாடல்.

பட்டணம்பார் பட்டணம்பார் பட்டணம்பாரு

பார்க்கப் பார்க்க சலிக்காத பட்டணம்பாரு

பின்னும், முன்னும் கணக்கில்லாத
வாகனம்பாரு

பீச்சுப்பார்க்கப் போறமக்கள் கும்பலைப்பாரு! (ப)

புகைவண்டி கத்திக்கிட்டுப் போறதைப் பாரு

பூங்காக்கள் மலர் விரித்துச் சிரிப்பதைப்பாரு

பெரிய பெரிய ரஸ்தாக்கள் அழகினைப்பாரு

பேர்போன செயின்ட் சார்ஜு
கோட்டையைப்பாரு! (ப)

பையன்களின் போட்டிவிளையாட்டையும்பாரு

பொருட்காட்சி விளக்கொளியின்
புதுமையைப்பாரு

போராட்ட வீரர்களின் சின்னத்தைப்பாரு

பௌவ நீரின் நீலநிறப் பரப்பையும்பாரு! (ப)

# 8. நடனப் பாடல்

(மெட்டு:— "எந்தன் உள்ளம் துள்ளி...
என்றபாடல்)

பள்ளிவளர் செல்வங்களாம் மாணவரே வாரீர்
தெள்ளுதமிழ்க் கீதம்பாடி ஆடஒன்று சேரீர் (ப)

காவினில் பூங்குயில் பாடுதல் கேட்டே
கண்கவர் மயிலினம் ஆடுதல் போலே
இன்னேசை தன்னிற் கேற்பத் துள்ளித்துள்ளி
ஆடுவோம்
என்றுமில்லா இன்பம் மேவும் நாளாமிந்த
நாளில் (ப)

நாடும் புன்னுகவ ராளியைக் கேட்டே
நஞ்சுமிழ் அரவங்கள் ஆடுதல் போலே
இன்னேசை உள்ளம் ஈர்க்க மெல்ல மெல்ல
ஆடுவோம்
என்றுமில்லா இன்பமேவும் நாளா மிந்த
நாளில் (ப)

# 8. தாத்தா வந்தாரு!

(மெட்டு:– "அத்தானைப்பாரு" என்ற
பாடலின் ஒலி உரு)

தாத்தா வந்தாரு—பட்டுச்
சட்டை தந்தாரு
ஆத்தாடி தங்கம்—அதன்
அழகினைப்பாரு!

பூப்போட்ட சட்டையிதைப்
போடச்சொன்னாரு—தாத்தா
போடச்சொன்னாரு

போட்டதுமே கையைவந்து புடிச்சுக்கிட்டாரு!
யாப்பா உந்தன் அழகு, கண்ணைப் பறிக்குதின்னாரு
பல்லில்லாத வாயினாலே சிரிச்சும் போட்டாரு! (தா)

லட்டு, ஜிலேபி, மிட்டாயெல்லாம்
வாங்கிவந்தாரு-தாத்தா வாங்கிவந்தாரு

புட்டுப்புட்டுக் கொடுத்து இதைத்தின்னு என்றாரு
லொட்டு, லொட்டுனு வெத்திலைபாக்கை
இடிச்சுக்கிட்டாரு

பொக்கை வாயில் போட்டு அதைக்
குதப்பிக்கிட்டாரு! (தா)

182133

## 10. உலகத்தின் சில முக்கிய நாடுகளும், அவற்றின் தலை நகரங்களும்.

(மெட்டு: கிளிக்கண்ணி)

1. சிந்தை களிப்புறவே
சீரும், சிறப்பு முற்று
இந்தியா வுக்கு டில்லி—பாலரே
இசைந்த தலைநகராம்!

2. நானா விதத்தினிலே
நலமுறு பீகிங் நகர்
சீனாவுக் கேற்ற தலை—நகராய்த்
திகழ்வதைக் காண்பீரே !

3. நாட்டிலுயர்ந்த வாழ்வை
நல்கி மற்றோர்க்கு வழி
காட்டும் ரஷ்யாவின் தலை—நகராம்
கவினுறு மாஸ்கோ தான் !

4. இங்கிலாந்துக்கு லண்டன்
எழிற் கெய்ரோ எகிப்த்துக்குத்
தங்கும் புகழ் கொண்டதாம்—டோக்கியோ
ஜப்பான் தலைநகர் காண் !

5. சரித்திரக் கீர்த்தியுற்ற
தலைநகர் பாரிஸ்—பெர்லின்
பிரஞ்சு—ஜெர்மன் நாட்டிற்கு—முறையே
பெயர் சொல்லும் நன்நகராம் !

6. அமெரிக்க நாட்டினுக்கும்
அழகு ஸ்பெயின் தேசத்திற்கு
அமைந்த தலைநகர்கள்—மு
ஆகும் வாஷிங்டன், மாட்

# எதிர் பாருங்கள் !

'சீலையம்பட்டி சிறுவர் இலக்கியப்பண்ணை' யின் சார்பாக, ஆசிரியர்களின் கூட்டு முயற்சியில், மாணவர் குலம் மகிழ, கதை, கவிதை, கட்டுரைகளுடன் மாதம் ஒரு புத்தகம் சிறந்த அம்சங்களில், குறைந்த விலையில் வெளிவரும் நன்னூலை ஆவலுடன்

## எதிர்பாருங்கள் !!

தெளிவான விவரங்களுக்கு எழுதுக:—

**சிறுவர் இலக்கியப்பண்ணை,**
சீலையம்பட்டி P. O.
(மதுரை ஜில்லா)



கி அச்சகம், சின்னமனூர்:-62.